திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களிடம் கொடுக்கப்படுகின்ற பல்வேறு மனுக்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் உள்ள துறைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. அங்கிருந்து சம்பந்தப் பட்டவர்களுக்குப் பதிலோ அல்லது சட்டமன்ற உறுப்பினருக்கு அதன்மேல் எடுக்கப்படும் நடவடிக்கை பற்றியோ தெரியப் படுத்துவது இல்லை. எடுக்கப்படும் நடவடிக்கையைத் தெரியப் படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதுபோன்ற கேள்விகளின் உட்பொருள் ஆங்காங்குள்ள அதிகாரிகளுக்கு விளங்கும் என்று நான் நம்புகிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள் எல்லாம் பொருள் கேட்டு அனுப்பி வைக் கின்றோம். ஆனால் அந்தக் கூட்டம் நடைபெறுகின்ற நேரத் தில், குறிப்பிட்ட கேள்விகளை மட்டும் எடுத்துக் கொள்கிறார் கள். மீதிக்குண்டான பதிலைக் கூட அந்தக் கூட்டம் நடை பெறுகின்ற நேரத்தில் கொடுப்பதில்லை. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அந்தக் கூட்டம் நடைபெறுகின்ற நேரத்தில் அனைத்துக் கேள்விகளுக்கும் உண்டான பதிலை அங்கே அச்சிட் டுக் கொடுக்கின்ற நிலைமையை உருவாக்கித்தர முன் வருவாரா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, விவாதிப்பதற்கு ஏற்ற பொருட்கள் பட்டியலிலே இடம் பெறும். அவை அஜெண்டாவிலே இடம் பெறவும், விவாதத்திற்கு ஏற் புடையவை அல்ல என்பதற்கான பதில் விளக்கங்களை அந்தக் கூட்டத்திலேயே வைப்பதற்கான ஏற்பாடுகளும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டு, செய்யப்படும்.

ஊட்டி போட்டோ பிலிம் தொழிற்சாலை.

*1944—திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊட்டியில் உள்ள போட்டோ பிலிம் தொழிற்சாலையில் கலர் பிலிம் தயாரிக்க மத்திய அரசை, தமிழக அரசு வற்புறுத்துமா ?

[1990 மே 11]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, உதகமண்டலத்திலுள்ள மைய அரசு நிறுவனமான ஹிந்துஸ்தான் நிழற்படச்சுருள் தயாரிப்பு நிறுவனத்தில் சினிமா வண்ணப் படம் (பாசிட்டிவ் வகை) தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த இவ்வரசு மைய அரசைத் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகையிலுள்ள அந்த போட்டோ பிலிம் தொழிற் சாலையில் சினிமா கலர் பிலிம் தயாரிப்பதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மாற்றி, உத்திரப் பிரதேசத்திலே இருக்கின்ற ஒரு இடத்திலே இதே போன்ற ஒரு போட்டோ பிலிமைத் தயாரிப்பதற்கு மத்திய அரசு ஏற்பாடு செய்திருப்பதாக அறிகின்றோம். அதே நேரத் திலே நம்முடைய உதகையில் எல்லா வசதியும் இருப்பதன் காரண மாக, இதற்காக மத்திய அரசு முன்வரவில்லை என்று சொன்னா லும், தமிழக அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து அங்கே தொழிற்சாலையைத் துவக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதுகுறித்து, இந்த அரசின் சார்பில் நிரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தொழிற்சாலையே மத்திய அரசு சார்புடைய ஒரு தொழிற்சாலைதான். அவர்களேதான் அங்கே இந்த வண்ணப்படம் தயாரிக்கின்ற இந்தத் திட்டத்தை யும் செயல்படுத்த முன்வரவேண்டும். ஆனால் முன்வர மறுக்கிறார்கள். ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் கடந்த ஆண்டில் உதகமண்டலத்தில் நடைபெற்ற ஒரு விழாவில் அன்றைய தொழில் அமைச்சர் திரு. வெங்கல்ராவ் அவர்களுடைய முன்னிலையிலும் கூட, இதை நான் வலியுறுத்தி, வற்புறுத்திப் பேசினேன். அவர்களும் அந்தக் கூட்டத்திலேயே அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார்கள். தொடர்ந்து இந்தியாவினுடைய முன் னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கு 24—6—1989 அன்று ஒரு கடிதம் எழுதப்பட்டது. நானே எழுதினேன். அதற் குப் பதில் எழுதிய திரு. ராஜீவ் காந்தி அவர்கள், முன்னாள் பிரதமர் அவர்கள்— 24—8—1989-இல் மத்திய அரசினுடைய தொழில் அமைச்சகத்தின் செயலாளருக்கு இது அனுப்பப் பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தார்கள். அதற்குப் பிறகு, 27—9—1989 இலும் மீண்டும் ஒரு நினைவூட்டுக் கடிதம் எழுதப்பட்டது. தொடர்ந்து இப்போது 16—12—1989 இலும் ஒரு நேர்முகக் கடிதம் பிரதமருக்கு அனுப்பப்பட்டது. அதன் பின்னர், மைய அரசினுடைய தொழில் அமைச்சருக்கு 26–2-1990 இலும் ஒரு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. இருக்கின்ற தொல்லை என்னவென்றால், உத்திரப் பிரதேசத்திலே நைனிட்டா லுக்கு அருகாமையிலே இதைத் தொடங்க வேண்டும் என்று திட்டம் வகுக்கப்பட்டு இன்னும் அங்கே தொடங்கப்படாம லேயே இருக்கிறது. காரணம், அதற்கான வசதிகள், வாய்ப்புக்

கூறுகள் அங்கே இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் இப்போது நமக்கு வந்துள்ள கடிதத்தில், இந்த நிறுவனம், திட்டத்தைச் செயல்படுத்த இயலாவிட்டால் இங்கே அதை விஸ்தரித்துத் தருவதற்கு முயற்சிக்கலாம் என்று இப்போது மைய அரசு எழுதியுள்ளது. பொதுவாக, தென்னகப் பகுதிகளில் நடைபெறுகின்ற, நடைபெறவேண்டிய பல்வேறு தொழிற் திட்டங்களுக்கு சில நேரங்களில் உத்திரப் பிரதேசம் இவ்வாறெல்லாம் குறுக்கே நிற்கிறது. நாம் என்ன செய்ய இயலும் ?

9-15 மணி

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவிதமான உதவிகளும் உதகையில் இருக்கின்ற நேரத்தில், ''உத்திரப் பிரதேசத்தில்தான் நாங்கள் இதை அமைக்க இருக்கிறோம் ; அது முடியாது என்று சொன்னால்தான் தமிழகத்தில் அமைப்போம்'' என்று மத்திய அரசு சொல்கிறது. அதை வலியுறுத்துகின்ற அளவுக்கு — உதகையிலேதான் ஆரம்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தி இந்த அவையிலே தனியாக ஒரு தீர்மானம் போட்டும், அதே நேரத்தில், இந்தத் தொழிற்சாலை தமிழகத்தில் துவக்கினால், அதனுடைய மதிப்பீடு என்ன இருக்கும்; எத்தனைப் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதை அரசு அறிவிக்குமா என்றும் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பைப் பொறுத்த வரையில், இன்று வளர்ந்து வருகின்ற விஞ்ஞானப் புதுமையில், அதிகம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க இடம் இல்லை. ஏனென்றால், அது ஒரு சினிமா வண்ணப்படத் தொழில்தான். அதனால் நூற்றுக்கணக்கானவர்களுக்குத் தான் வேலைவாய்ப்புக் கொடுக்க இயலும். இருந்தாலும், இதற்காக ஒரு தீர்மானம் போடுவதை விட, இன்னும் பெரிய பெரியத் தொழிற்சாலைகள் எல்லாம் வேண்டி, மத்திய அரசோடு நாம் வாதாடிக் கொண்டிருக்கிறோம். இதற்கெல்லாம் சேர்த்து ஒரு தீர்மானம் போடலாம். குறிப்பாக, 'ஆரோமேடிக்' போன்ற தொழிற்சாலைகளைப் பற்றி அன்றைக்குக் கூட அவையிலே பேசப்பட்டது. அந்தத் தொழிற்சாலைகளெல்லாம் தமிழகத்திற்கு வர வேண்டுமென்று நாம் உறுதிப்பாட்டோடு மத்திய அரசை வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம்.

செனட் சிண்டிகேட் உறுப்பினர்.

*2622—திரு. அ. இரகுமான்கான் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக் கழக செனட் சிண்டிகேட் உறுப்பினர் இரு முறைக்கு மேல் இருக்லாகாது என்ற சட்டத்தை அரசு ரத்து செய்யுமா ?